இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலம்)

ந.க.எண். 31154 / 2010 எம்3 நாள் 17.12.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் குத்தகை / வாடகை நிலுவை தொகை வசூலித்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்குதல்– தொடர்பாக

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் குத்தகைக்கு பொது ஏலம் மூலம் வழங்குதல் குறித்து 1959 இந்து சமய அறநிலையக்–கொடைகள் விதி 12(2) (அசையாச் சொத்துக்கள் குத்தகைக்கு விடுதல்)–ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட பிரிவு 116(2)(xiii)–ல் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் அந்தந்த அறநிறுவனங்களால் குத்தகை / வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களில் அன்றாட பூஜைகள் மற்றும் திருவிழாக்கள் நடத்திடவும், அவற்றை பராமரிக்கவும், ஊழியங்கள் மேற்கொள்ளவும், பண்டையகால மன்னர்கள் முதற்கொண்டு அனைத்து தரப்பினரும் பல்வேறு கட்டங்களில், இன்றைய தேதி வரை, அசையும் மற்றும் அசையா சொத்துக்களை தானமாக வழங்கி வருகிறார்கள். இத்தகைய சொத்துக்களை சிதறாமல் பாதுகாப்பதும், பராமரிப்பதும், அவற்றின் மூலம் வருவாயினை பெருக்கி, திருக்கோயில்களை பராமரிப்பதும், புனரமைப்பதும் இத்துறையின் முக்கிய பணியாகும்.

அவ்வாறு இருக்க, அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் குத்தகை / வாடகைக்கு விடப்பட்ட இனங்களில் இருந்து வரப்பெற வேண்டிய குத்தகை/வாடகைத் தொகையானது பல வருடங்களாக வசூலிக்கப்–படாமல் அதிக அளவில் நிலுவையாக உள்ளது என அறியப்படுகிறது. இச்செயல்பாடானது ஏற்கக்கூடியது ஒன்றல்ல. ஏனெனில், அறநிறுவனங்களின்

Verified RealEstate

நலன்களை விரும்பி அசையாச் சொத்துக்களை தானமாக வழங்கியவர்களின் நோக்கத்திற்கு மாறாக இச்செயல்பாடு அமைந்துவிடும்.

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை W.P.(MD)No. 16833/2017 dated 12.02.2018-ல் கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது:-

பத்தி 20-ல் **(b)-** The 18th respondent shall issue a public notice within two weeks by employing all the methods like publication in news papers, notice board of the temples. Publication in their official website and in any form of print or media, intimating that the persons in possession of the temple lands to voluntarily pay the arrears of rent within four weeks from the date of issuance of such notice and upon such failure, appropriate action must be initiated under 34B of the HR & CE Act and recover/retrieve the properties;

g) Such committee shall also look into the period of arrears and the action taken by the Executive Officers/Joint Commissioners/Assistant Commissioners to recover the arrears and the properties from such defaulters. In cases, the officers have failed to collect the rent or initiate any action for recovery of the rent or to take steps to retrieve the properties belong to various temples in Tamil Nadu for a period of more than two months from the date of such default, action must be initiated against such erring officers;

h) Whenever the properties belonging to the temple are lease out, the 18th respondent must ensure that the sentiment of the donors and the object of such endowment is not defeated.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிப்பேராணை மனு (MD) எண். 17198/2020 உத்தரவு நாள் 11.12.2020-ல் கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

11(ii) Action shall be taken against those employees who fail to discharge their duties like non collection of rent, failure to take action against the defaulters, failure to protect the properties from encroachment and failure to take action against the encroacher to retrieve the properties.

மேற்கண்டவாறு, மாண்பமை சென்னை உயநீதிமன்றத்தால் காலக்கெடுவுடன் கூடிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதன் தொடர்பாக உயர்நீதிமன்ற விசாரணையின்போது அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, அறநிறுவனங்கள் மூலம் குத்தகை/வாடகைக்கு விடப்பட்ட இனங்களில் நிலுவைத் தொகை உடனடியாக வசூலித்திட ஏதுவாக சம்பந்தப்பட்ட அறநிறுவனங்கள் குத்தகைதாரர்/வாடகைதாரர்களுக்கு, குத்தகை/வாடகை நிலுவைத் தொகையினை 30 தினங்களுக்குள் செலுத்தப்பட வேண்டுமெனவும், அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில் குத்தகை/வாடகை அனுபவத்திலிருந்து 1959 இந்து சமய அறநிலையக்கொடைகள் சட்டப்பிரிவு 78-ன் கீழ் வெளியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தை தெரிவித்து முதல்

Verified Real Estate

அறிவிப்பினை சம்மந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர் / நிர்வாகி / பரம்பரை அறங்காவலர் / தக்காரால் குத்தகை/வாடகை நிலுவைதாரர்களுக்கு பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பப்பட வேண்டும்.

அதற்கு பின்னரும், குத்தகை/வாடகை நிலுவைத் தொகை செலுத்தாத நபர்களுக்கு மீண்டும் மேற்கண்டவாறு விவரங்களை தெரிவித்து, 15 தினங்களுக்குள் நிலுவைத் தொகை செலுத்த வேண்டுமென குறிப்பிட்டு இரண்டாவது முறையாக அறிவிப்பினை சம்மந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர் / நிர்வாகி / பரம்பரை அறங்காவலர் / தக்காரால் பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் குத்தகை/வாடகை நிலுவைதாரர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இதன் பின்னரும், குத்தகை/வாடகை நிலுவைத் தொகையினை செலுத்த முன்வராத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து அறநிறுவனங்கள் சார்பாக சம்பந்தப்பட்ட உதவி ஆணையருக்கு ஒருவார காலத்திற்குள் அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

அறநிறுவனங்கள் சார்பாக குத்தகை/வாடகை செலுத்த முன்வராத நபர்கள் மீது உதவி ஆணையரிடம் அறிக்கை அளிக்கப்பட்ட உடன் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திருக்கோயில் அசையாச் சொத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு உடனடியாக மண்டல இணை ஆணையரிடம் சட்டப்பிரிவு 78-ன் கீழ் வழக்கினை தாக்கல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், மண்டல இணை ஆணையர்களால் உத்தரவிடப்படும் இனங்களில் உடனுக்குடன் திருக்கோயில் சொத்துக்களை மீட்டிட சம்பந்தப்பட்ட உதவி ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கை விவரத்தினை தவறாமல் பின்பற்றி செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கையில் கண்ட விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

17.12.2021
கண்காணிப்பாளர் 2/3

நகல்-

17.12.2021
இவ்வலுவலக R, V பிரிவுகள் (எண்ணிடல் மூலம்)

மிகை.

Verified eGeoTotal